அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

GIT | T | II

முதலாந் தவணை பரீட்சை – தரம் 12 – 2018

# First Term Test - Grade 12- 2018

சுட்டெண் : ........................

பொதுத் தகவல் தொழிநுட்பவியல் II
General Information Technology II


காலம் : 2 மணி

**அறிவுறுத்தல்கள்**

- **நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

01).

a) முறைமை எனும் பதத்தை வரைவிலக்கணப்படுத்துக.
b) கணினியின் பிரதான பகுதிகள் 3 தருக.
c) கணினித் தொகுதியின் படத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க.




Input devices - உள்ளீட்டுச்சாதனங்கள், Output devices வருவிளைவுச் சாதனங்கள், control unit – கட்டுப்பாட்டு அலகு எனக் கருதுக.

I. A, B, C, D ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.
II. 'A' யின் பிரதான தொழிலைக் குறிப்பிடுக.
III. உள்ளீட்டு, வருவிளைவுச் சாதனங்களுக்கு உதாரணங்கள் 2 வீதம் தருக.
IV. 'D' யிற்கு கணினியினுள் பயன்படுத்தும் சாதனம் ஒன்றைத் தருக.

02). சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளைப் பயன்படுத்தி தயார் செய்யப்பட்ட ஆவணம் (உரு 1) கீழே தரப்பட்டுள்ளது.





Figure 01

சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளில் பயன்படும் கருவிகள் 1 தொடக்கம் 20 வரை தரப்பட்டுள்ளன. (உரு 2) அதற்கு பொருத்தமான கருவிகளுக்குரிய இலக்கங்களை எழுதுக.





**figure 02**

( மேலதி கருவிகளுக்கு புள்ளி வழங்கப்படாது)

a) ‘A’ இனை வடிவமைக்க பயன்படுத்தப்பட்ட கருவிகள் எவை?

b) ‘B’ யினால் காட்டப்பட்டுள்ள உபதலைப்பை தடிப்பக்கி சாய்வாக்கி எழுத்துக்களின் கீழ்க்கோடிட பயன்படும் கருவிகளை தருக.

c) உபதலைப்பு B யின் எழுத்தின் அளவை 12 இலிருந்து 22 ஆக மாற்றியமைக்கப் பயன்படும் கருவிகளைத் தருக.

d) பந்தி B யின் எழுத்தின் வடிவம், நிறம் என்பவற்றை மாற்ற பயன்படும் கருவிகள் எவை?

e) D எனும் பந்தியை வலது நேர்ப்படுத்துவதற்குப் பயன்படும் கருவி எது?
f) ‘E’ எனும் படவுருவை உள்ளிடப் பயன்படும் கருவிகள் எது?
g) ‘F’ எனும் பட்டியலை குண்டுப் பட்டியலிடப் பயன்படும் கருவி எது?

03) a) தரப்பட்டுள்ள பட்டியலில் இருந்து பொருத்தமான விடைகளைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக.

**(வட்டு சரிபார்த்தல், முறைமை மென்பொருள், வட்டுத் துணிக்கை நீக்கல், வட்டுத் துப்பரவாக்கல், பணிசெயல் முறைமை, உட்பொதிந்த பணிசெயல் முறைமை, பிரயோக மென்பொருள்)**

I. பயனர்னகளின் தேவைகளை நிறைவேற்ற பயன்படும் மென்பொருள் ..........................................
II. குறிப்பிட்ட சாதனங்களுக்கான பதிக்கப்பட்ட பணிசெயல் முறைமை ..........................................
III. கோப்புத் துண்டங்களைத் தேடி மீளொழுங்குப்படுத்தி வட்டுக்களுக்கு மேலதிக இடைவெளிகளை ஏற்படுத்தல் …………………………………………..
IV. தேவையற்ற கோப்புக்களை இனங்கண்டு நீக்குவதற்கு பயன்படும் கருவி ……………………………
V. பயனருக்கும் கணினிக்கும் இடையில் இடைமுகத்தை ஏற்படுத்துவதுடன் வளங்களை முகாமைத்துவம் செய்வது ……………………………………………… ஆகும்.

b) முறைமை மென்பொருள், கணினியில் வன்பொருட்களுக்கும் மென்பொருட்களுக்கும் இடைமுகத்தை ஏற்படுத்துவதுடன் பிரயோக மென்பொருட்களின் செயற்பாடுகளுக்கு வெளியையும் ஏற்படுத்தும்.
I. பணிசெயல் முறைமையினால் வழங்கப்படும் இருவகையான இடைமுகங்களும் எவை? அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணங்கள் வீதம் தருக.
II. மேலே தரப்பட்ட இடை முகங்களுக்கிடையிலான வித்தியாசங்களை விபரிக்க.

4) கணினியை ஒரு முறைமையாகக் கொள்ளலாம். அதன் கூறுகளாக மென்பொருட்களையும் வன்பொருட்களையும் கருதலாம்.
a) தனியாள் கணினிகளில் பயன்படுத்தப்டும் இரு உள்ளீட்டுச் சாதனங்களைத் தருக.
b) வன்பிரதிகளை வருவிளைவாக்கும் இரு வருவிளைவுச் சாதனங்களைத் தருக.
c) காகிதங்களில் வரையப்பட்ட படவுருக்களை கணினியில் உள்ளிடுவதற்கு பயன்படும் உள்ளீட்டுச் சாதனங்கள் 2 தருக.
d) வரைபியல் வடிவமைப்பு மென்பொருள் ஒன்றை தருக.
e) ‘‘காந்த நாடாக்களில் தரவுகளை சேமிப்பதிலும் வன்வட்டில் சேமித்தல் மிகவும் வினைத்திறன் மிக்கதாகும்’’. தரப்பட்டுள்ள கூற்று உண்மையா பொய்யா எனக் குறிப்பிட்டு, உமது விடைக்கான காரணத்தை தருக.

05) a) கமல் தனது தாயிடம் ரூபாய் 1000 பெற்று புத்தகப்பை ஒன்றையும் நீர் போத்தல் ஒன்றையும் கொள்வனவு செய்தான். புத்தகப்பையின் விலை ரூபாய் 650, நீர்ப்போத்தலின் விலை ரூபாய் $11001000_2$ ஆகும்
I. புத்தகப்பையின் விலையை இரும எண்ணில் தருக.
II. நீர்ப்போத்தலின் விலையை தசம எண்ணில் தருக.
III. பொருட்களை கொள்வனவு செய்ததன் பின்னர் மிகுதியாக கிடைக்கும் தொகையை இரும எண்ணில் கணிக்க.

b) எண்முறைமையில் பயன்படும் இலக்கங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு முறைமையின் அடிப் பெறுமானம் தீர்மானிக்கப்டுகின்றது. மேலுள்ள கூற்றை அடிப்படையாகக் கொண்டு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை நிரப்புக.

| **எண்முறைமையின் அடிப் பெறுமதி** | **எண்முறையில் பயன்படும் மிகப் பெரிய எண் அல்லது எழுத்து** |
|---|---|
| 2 | …………………… |
| ……………………… | 7 |
| 10 | ……………………… |
| 16 | ……………………… |


c) கூற்றுக்களை சரி அல்லது பிழை கூறுக.

I. 'n' அடிப்பெறுதியுடைய எண்முறைமையின் உச்ச இலக்கம் (n+1) ஆல் பிரதிநிப்படுத்தப்படும்.
II. இரும, எண்ம, பதின்ம மற்றும் பதினறும ஆகிய நான்கு எண்முறைமையிலும் பொதுவாக இரு இலக்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
III. யுனிகோட் முறைமையினால் தமிழ், பிரன்ஸ் மற்றும் அராபி மொழிகளின் எழுத்துக்களை உடபடுத்தலாம்.
IV. BCD குறியாக்க முறைமையினால் எழுத்துக்கள் பிரதிநிதிப்படுத்தலாம்.
V. எந்தவொரு எண்ம எண்முறைமையும் மூன்று இலக்கங்களால் வகைகுறிக்கலாம்.

d) குறியாக்கல் முறைமைகளில் பயன்படுத்தப்படும் பிட் வலுக்கேற்ப பயன்படும் குறிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்டுகின்றது. அதற்கேற்ப பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.

| **குறியாக்கல் முறைமை** | **பயன்படும் பிட் களின் எண்ணிக்கை** |
|---|---|
| BCD | |
| ASCII | |
| EBCID | |
| Unicode | |

06) கீழே தரப்பட்டுள்ள தர்க்கச்சுற்றை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க. ( x,y உள்ளீடுகள், z வருவிளைவு எனக்கருதுக.)




I. A,B மற்றும் C ஆகிய தர்க்கப்படலைகளை பெயரிடுக.
II. வருவளைவு Z இற்கான பூலியன் கோவையைத் தருக.
III. சாத்தியமான எல்லா உள்ளீடுகளுக்குமான வருவிளைவை காண்பிக்கும் உண்மை அட்டவணையை வரைக.
IV. மேலே தரப்பட்ட உண்மை அட்டவணையைக் கருதி அதே வருவிளைவை விளைவாகத் தரக்கூடிய சமவலுவான தர்க்கச் சுற்றொன்றை வடிவமைக்க.